# சமரச சுத்த சன்மார்க்க நெறியின் தோற்றமும் வளர்ச்சியும்

ந. கந்தசாமி

## அறிமுகம்

"**வா**ழையடி வாழையென வந்த திருக்கூட்ட மரபினில் யானொருவனன்றோ?" (*திருவருட்பா 11, பதி. 11, பா. 4*) என்பது வள்ளலார் வாய்மொழியாகும். தமக்கு முன்னாத் தோன்றிய இறையடியார்களைப் போன்றே, தாமும் உலகியல் வாழ்வைப் புறக்கணித்து அருளியலை நாடியவா். தமக்கு முன் தோன்றிய அருளாளர்கள் தாம் உய்யும் வழி குறித்துச் சிந்தித்து அதனை நாடினர். ஆனால், வள்ளற் பெருமானோ மன்னுயிர்கள் அனைத்தும் இன்பம் துய்க்க வேண்டும் என எண்ணியவா். பத்தொன்பதாம் நூற்றாண்டில் இவர் மக்களுக்குப் புகட்டிய அறிவுரைகள் **'சமரச சுத்த சன்மார்க்க நெறி'** எனும் பெயரில் இவரால் குறிப்பிடப்பட்டது. இந்நெறி பற்றிய விளக்கங்கள் ஓரளவு இக்கட்டுரையில் விளக்கப்படுகின்றது. இதற்குத் துணைபுரியும் வகையில் இராமலிங்கரின் வரலாறு, இவருடைய இலக்கியப் படைப்புகள், இவர் வாழ்ந்த காலப் பின்னணி ஆகியன முதற்கண் இங்கே தொட்டுக்காட்டப் பெற்றுள்ளன. இறுதியாக, சமரச சுத்த சன்மார்க்க நெறிக்கு இவர் தரும் விளக்கம் மற்றும் இவருடைய இலக்கியப் படைப்புகளில் இது தோன்றி வளர்ந்த நிலை ஆகியன ஆராயப்பெறுகின்றன. பின்னா் இராமலிங்கா் இதனை நடைமுறைப்படுத்த மேற்கொண்ட முயற்சிகள் பற்றிய விளக்கங்கள் இடம் பெறுகின்றன.

மேற்காணும் கருத்துகளை உறுதி செய்ய திருவருட்பா பதிப்புகளில் ஆ. பாலகிருஷ்ணபிள்ளை பதிப்புகளை (1933, 1957, 1958, 1959, 1986) முதன்மையாகவும், ஏனையவற்றைத் துணையாகவும் கொண்டும் இக்கட்டுரை எழுதப் பெற்றுள்ளது. இராமலிங்கரின் உரைநடைப் பகுதியை விளக்கப் பெரும்பாலும் ஊரன் அடிகள் பதிப்பே (1972) இக்கட்டுரையில் கையாளப்படுகின்றது என்பது இவண் குறிப்பிட வேண்டிய ஒன்றாகும். மேலும் இக்கட்டுரையில் கூறப்பெறும் செய்திகள் பெரும்பாலும் நூலாசிரியரின் **'சமரச சுத்த சன்மார்க்க நெறி'** (*அருள்செல்வி, பா. 1990*) என்னும் நூலிலிருந்து தொகுக்கப் பெற்றதாகும்.

இனி முன்னரே குறிப்பிட்டபடி, கீழ்க்காணும் பகுதியில் இராமலிங்கரின் சமரச சுத்த சன்மார்க்க நெறிக்கு வலுவூட்டும் வகையில் இவர்தம் வரலாறு, படைப்புகள், வாழ்க்கைப் பின்புலம் ஆகியன தொட்டுக் காட்டப் பெற்றுள்ளன.

## இராமலிங்கரின் வாழ்வியலும், காலப் பின்புலமும்

5. 10. 1823இல் இவ்வுலகில் அவதரித்த வள்ளலாரின் வாழ்க்கை வரலாறு நமக்கு முழுமையாகக் கிட்டவில்லை என்பது வெள்ளிடைமலை. எனினும் அக்காலத்தில் திருவருட்பாவைப் பதிப்பித்தோர் எழுதியவை, தனிநூல் வடிவினவாக வெளிவந்த இவர்தம் வரலாற்று நூல்கள், தொழுவூர் வேலாயுதனார் பிரம்மஞான சங்கத்தாருக்கு அளித்த வாக்குமூலம், திருவருட்பா பாடல்களில் காணப்பெறும் இவர்தம் வரலாறு குறித்த அகச்சான்றுகள், இவரின் வாய்மொழி அறிவுரைகளின் வழி வெளியாகும் செய்திகள் போன்றன இராமலிங்கரின் வாழ்வியலின் ஒரு பகுதியை விளக்க வல்லனவாய் உள்ளன. மேற்காணும் குறிப்புகள் வழியாக இவர் தொடக்க நிலையில் சென்னையிலும், பிற இடங்களிலும் தல வழிபாடுகளை இயற்றியுள்ளார். பின்னர் சென்னையை விட்டு அகன்று, இக்காலக் கடலூர் மாவட்டச் சிற்றூர்களான வடலூர், மேட்டுக்குப்பம், கருங்குழி போன்ற இடங்களில் மக்கள் தொண்டாற்றினார். இக்காலத்திலேயே சமரச சுத்த சன்மார்க்க நெறியைத் தோற்றுவித்து, அதனை நடைமுறைப்படுத்த நிறுவனங்கள் சிலவற்றையும் ஏற்படுத்தினார் எனத் தெரிகின்றது. இதன்பின் மேட்டுக்குப்பம் எனும் சிற்றூரில் முத்தேகச் சித்தியடைந்தார். இவர்தம் உடல் மண்ணுக்கோ, நெருப்புக்கோ இரையாகவில்லை என்பது உண்மையாகும்.

## இராமலிங்கரின் காலப் பின்புலம்

வள்ளலார் சென்னையை விட்டு அகன்ற பின்னர் சமூக முன்னேற்றத்திற்கான முயற்சியில் ஈடுபட்டுள்ளார். ஆன்மீகத்திலும், சமூக வாழ்விலும் மக்கள் மனத்தில் பல சீர்திருத்தக் கருத்துகளைப் புகுத்தினார். இவ்வெண்ணங்கட்கு இவர் வாழ்ந்த 19–ஆம் நூற்றாண்டுச் சூழல் துணை புரிந்திருக்கலாம். அக்கால அரசியல், சமயம், பொருளாதாரம், சமூகச் சூழல் ஆகியன இவரைப் பலவாறு சிந்திக்கத் தூண்டின. 19ஆம் நூற்றாண்டில் ஆங்கிலேயரின் வருகையினால் மக்கள் பல விஞ்ஞான முன்னேற்றங்களைக் கண்டிருந்தாலும், கருணையிலா ஆட்சியினால் பல துன்பங்கட்கு உள்ளாயினர். நம் நாட்டில் ஏற்கெனவே இருந்த வரி வசூலிக்கும் முறை, நீதி வழங்கும் முறை போன்ற பல பழக்கங்கள் அந்நியரால் மாற்றப்பட்டன.

சமய நிலையில் ஏற்கெனவே நம் நாட்டில் வேரூன்றி இருந்தவை தவிர, புதியதாகக் கிருத்துவ சமயமும் நுழைந்தது. இதனால் மக்கள் கடவுள் யார் என அறியும் அறிவின்றித் திகைத்தனர். மேலும், பொருளாதாரத்தில் மக்கள் மிகவும் பின்னடைந்தனர். அக்காலத்தில் 1858 வரையில் 24 பஞ்சங்கள் (குருசாமி, பக். 9) ஏற்பட்டு மக்கள் திண்டாடினர். மேலும், சமூக அமைப்பில் சாதி முறைகள் கண்மூடிப் பழக்கங்கள் போன்றவற்றில் மக்கள் நம்பிக்கை கொண்டிருந்தனர். இந்நூற்றாண்டில் 700 சாதிகள் (சுப்பிரமணியன், 1950 : 212) இருந்ததாகத் “தர்ஸ்டன்” எனும் அறிஞர் குறிப்பிடுகின்றார்.

இவைபோன்ற குறைபாடுகளைக் கண்ணுற்ற வள்ளலார் தம்முடைய சமரச சுத்த சன்மார்க்க நெறியில் இவைகளைக் களைய முற்பட்டுள்ளார். மேலும் இந்நூற்றாண்டில் வாழ்ந்த இராசாராம் மோகன்ராய் (1772 – 1823), வைகுண்டர் (1808 – 1851), தயானந்தர் (1824 – 1883),

இராமகிருஷ்ணர் (1836 – 1886) ஆகியோரின் சீர்திருத்த உணர்வுகளும் இவருக்குத் துணை புரிந்திருக்கலாம்.

இனி இராமலிங்கரின் சமரச சுத்த சன்மார்க்க நெறி பற்றிய விளக்கங்களை அறிய இவருடைய இலக்கியப் படைப்புகள் பற்றிய அறிவு அவசியமாகின்றது. இவற்றைப் பின்வரும் பகுதி விளக்கும்.

**இலக்கியப் படைப்புகள்**

வள்ளற்பெருமானாரின் இலக்கியப் படைப்புகள் பாடல் வடிவிலும், உரைநடை வடிவிலும் இயற்றப் பெற்றவை. இராமலிங்கரின் பாடல்கள் '**திருவருட்பா**' எனவும், இதனுள் சேராதவை '**தனிப்பாடல்கள்**' எனவும் அழைக்கப் பெறுகின்றன. இவற்றுள் தனிப்பாடல்கள் என்பன சாற்றுக் கவிகளாகவும், 'குடும்ப கோஷம்', 'குருட்டாட்டம்', 'குடும்ப கோரம்' எனும் தலைப்புகளிலும் எழுதப்பட்டுள்ளன. இவர்தம் தனிப்பாடல்களில் கடித அமைப்பினவும் உண்டு.

வள்ளலாரின் உரைநடைகள் இவரால் கைப்பட எழுதியவையாகவும், இவரது வாய்மொழி அறிவுரைகளைக் கேட்டோர் எழுதி வைத்த குறிப்புகளாகவும் உள்ளன. இவை தொடக்க நிலையில் திருவருட்பாப் பதிப்புகளில் இடம் பெற்றுப் பின்னரே தனிநூல் வடிவினவாக பதிப்பிக்கப்பட்டன.

மேற்காணும் இவர்தம் இலக்கியப் படைப்புகள் இவர் சென்னையில் வாழ்ந்த போதும், சென்னையை விட்டு அகன்ற போதும் எழுதப் பெற்றவை ஆகின்றன. இவ்விரு காலங்களிலும் இவரால் எழுதப் பெற்றவைகளில் சமரச சுத்த சன்மார்க்க நெறியில் வளர்ச்சி நிலையினைக் காண முடிகின்றது. எனவே, இக்கட்டுரையில் இவரது படைப்புகள் இத்தகைய பாகுபாட்டின் அடிப்படையிலேயே பயன்படுத்தப்பட்டுள்ளது என்பது இவண் மனத்திற் கொள்ளத் தக்கதாகும்.

மேலே குறிப்பிட்ட இராமலிங்கரைக் குறித்த அடிப்படைச் செய்திகளை வைத்துக் கொண்டு சமரச சுத்த சன்மார்க்க நெறியினை ஆராயலாம். இங்கே இருபெரும் பிரிவாகச் சமரச சுத்த சன்மார்க்க நெறியின் விளக்கம் ஆராயப்படுகின்றது.

**முதற்பிரிவு - சமரச சுத்த சன்மார்க்கம் - விளக்கம்**

**இரண்டாம் பிரிவு - சமரச சுத்த சன்மார்க்க வளர்ச்சி நிலைகள்.**

**சமரச சுத்த சன்மார்க்கம் . விளக்கம்**

சமரச சுத்த சன்மார்க்க விளக்கத்தினை அறிய பின்வரும் மூன்று பகுதிகள் துணை செய்கின்றன.

**பகுதி 1 : சமரச சுத்த சன்மார்க்கம் - தொடர் விளக்கம்**

**பகுதி 2 : சமரச சுத்த சன்மார்க்க நெறியைக் கையாளுவோர் பின்பற்ற வேண்டிய நெறிமுறைகள்**

**பகுதி 3 : சுத்த சன்மார்க்க நெறியின் நோக்கமும் பயனும்**

**சமரச சுத்த சன்மார்க்கம் . தொடர் விளக்கம்**

வள்ளற்பெருமானின் இலக்கிய படைப்புகளில் பாடல்களைக் காட்டிலும் இவரது உரைநடைகளிலேயே மேற்காணும் தொடர் விளக்கத்தினை அதிகமாக அறிய இயலுகின்றது. சமரச வேத சன்மார்க்க சங்கம் (ஊரன் அடிகள், 1981 : 298–301) என்பதற்குப் பொருள் கூறும் விதமாக அமைந்த இராமலிங்கரின் அறிவுரைகளைக் கேட்டோர் எழுதி வைத்த குறிப்புகளில் மேற்காணும் தொடரின் விளக்கத்தினை நோக்க இயலும். எனினும், இப்பகுதியின் பெரும்பாலான செய்திகள் சன்மார்க்க சங்கத்தாரால் விளக்கம் பெற முடியாத ஒன்றாகவே உள்ளன. இப்பின்னணியில் எளிதில் விளங்கும் பகுதிகள் மட்டுமே இக்கட்டுரையில் எடுத்தியம்பப் பெறுகின்றன.

இப்பகுதியில் சமரச வேத சன்மார்க்க சங்கம் என்று இராமலிங்கர் குறிப்பிட்டாலும் பின்னர் இச்சங்கத்தினை உஷடாந்த சமரச சுத்த சன்மார்க்க சங்கம் என்று பெயர் மாற்றியுள்ளார் (மேற்படி, ப. 435). இவர் சமரச வேத சன்மார்க்க சங்கம் என்று குறிப்பிட்டு விளக்கம் அளித்தாலும் பெயர் மாற்றம் செய்தவாறே **உஷடாந்தம், சமரசம், சுத்தம், சன்மார்க்கம்** என ஒவ்வொரு சொல்லுக்கும் விளக்கம் அளித்துள்ளார். இவற்றிற்கான விளக்கம் முறையே வருமாறு :

**உஷடாந்தம்** – வேதாந்தம், சித்தாந்தம், போதாந்தம், நாதாந்தம், யோகாந்தம், கலாந்தம் என ஆறு.

**சமரசம்** – எல்லா அந்தங்களின் அந்தமும் தனக்குப் பூர்வமாக்கித்தான் உத்தரத்தினின்று மருவியது சமரசம்.

**சுத்தம்** – சுத்தம் என்பது ஒன்றுமல்லாதது. இது சன்மார்க்கம் என்னும் சொல்லுக்கு முன்னர் வந்த நூல். சமய, மத அனுபவங்களைக் கடந்தது.

**சன்மார்க்கம்** – இச்சொல்லிற்கான ஓரளவு விளக்கத்தினைக் காண முடிகின்றது. 'சன்மார்க்கம்' என்பது தாச மார்க்கம், சற்புத்திர மார்க்கம், சக மார்க்கம், சன்மார்க்கம் என்பதில் நான்காவது மார்க்கம் எனக் குறிப்பிடுகின்றார் வள்ளலார். மேலும் இச்சொல் சத் + மார்க்கம் எனப் பிரிக்கப்படுகின்றது. இதனுள் 'சத்' என்பதற்கான விளக்கங்கள் தெளிவுபடக் கூறப்படவில்லை. 'மார்க்கம்' என்பதற்குத் துவாரம் அல்லது வழி. வழியென்பது சத்தென்னும் பொருளின் உண்மையைத் தெரிவிக்கும் மார்க்கம் ஆதலால் எவ்வகை–யிலும் உயர்வுடையது. பாவனாதீதம், குணாதீதம், லட்சியாதீதம், வாச்சியா தீதம் ஆகிய சுத்த சன்மார்க்கம் என்னும் பொருள் விளக்கத்தை இராமலிங்கர் தந்துள்ளார்.

மேலும் உரைநடைப் பகுதியில் இச்சொல் விளக்கத்தைக் காணலாம். "நெல்லை விளைத்தான்" என்பதில் நெல்லை வீட்டிலிருந்து எடுத்துச் சென்று உழுதல் தொடங்கி, அதனை அனுபவிக்கும் அனைத்துச் செயற்பாடுகளும் அடங்குதல் போல சன்மார்க்கம் என்பது சாதாரணம் முதல் அசாதாரணம் ஈறாக அடங்கிய அனைத்துச் செயற்பாடுகளையும் தன்னகத்துக் கொண்டதாக விளங்குகின்றது.

இதனைத் தொடர்ந்து சன்மார்க்கம் என்பதற்கு 'ஞானவழி' என்னும் பொருளும் ஜீவகாருண்ய ஒழுக்க நூலில் (மேற்படி, பக். 52) கையாளப்பட்டுள்ளது. இங்கே இச்சொல்லிற்கு எதிர்ச்சொல் 'துன்மார்க்கம்' என்றும் கூறப்பட்டுள்ளது.

## சன்மார்க்கத்தின் பிரிவுகள்

சன்மார்க்க நெறியினை வள்ளலார் மூன்று பிரிவுகளாகப் பிரித்துள்ளார். சமய சன்மார்க்கம், மத சன்மார்க்கம், சுத்த சன்மார்க்கம் எனும் பெயர்களில் இவை அமைகின்றன. இதனுள் சமய மத சன்மார்க்கங்களுள் மேலாது சுத்த சன்மார்க்கம் என்கிறார்.

### சமய சன்மார்க்கம்

சமய சன்மார்க்கம் என்பது சத்துவ குண சம்பந்தமுடையது. சத்துவ சம்பந்தமுடைய மார்க்கம் யாதெனில் சத்போதம், சத்கர்மம், சத்சங்கம், சத்காலம், சத்விசாரம், சற்சனம், சற்செய்கை முதலியனவாகும். இதன் இயல்பு கொல்லாமை, பொறுமை, சாந்தம், அடக்கம், இந்திரிய நிக்கிரகம், ஆன்ம இயற்கைக் குணமாகிய ஜீவகாருணியம் எனும் தெளிவான விளக்கத்தினைச் சமய சன்மார்க்கத்திற்குத் தருகின்றார்.

### மத சன்மார்க்கம்

மத சன்மார்க்கத்தினைப் பற்றிப் பின்வருமாறு இராமலிங்கரின் அறிவுரைகளில் காண முடிகின்றது. இதன் முதல் விளைவு தன்னடிமையாகப் பலரையும் எண்ணல், இரண்டாவதாகத் தன் மகனாக எண்ணல், மூன்றாவது தன் நண்பனைப் போல் எண்ணல், நான்காவது தன்னைப் போல் எண்ணல். இதுவே ஜீவ நியாயம். இவ்வாறே தான் கடவுளுக்கு அடிமையாதல், புத்திரனாதல், நண்பனாதல், கடவுளே தான் ஆதல். இதுவே மத சன்மார்க்க முடிவாகக் கூறப்பட்டுள்ளது.

### சுத்த சன்மார்க்கம்

மேற்கூறியவாறு சுத்தம், சன்மார்க்கம் இவற்றின் பொருள்களை இணைத்தே சுத்த சன்மார்க்கத்தின் உண்மைப் பொருளை உணர இயலும். இதற்குச் சம மதங்களைக் கடந்த 'நன்னெறி' என்னும் பொருளைக் கூறலாம்.

## திருவருட்பாவில் 'சன்மார்க்கம்'

இராமலிங்கரின் பாடல்களில் இச்சொல்லிற்கான விளக்கங்கள் இருவேறு

நிலைகளில் உள்ளன. சென்னையில் இவர் வாழ்ந்த காலத்தில் பாடப்பட்டவற்றில் சன்மார்க்கம் எனும் சொல் சைவ சமயம் என்னும் பொருளிலேயே பயன்படுத்தப்பட்டுள்ளது. இதற்குச் சான்றாக,

*"................................ சன்மார்க்க மேவும்*
*மாண்புடைய பெருந்தவத்தோர் மகிழவாழும்*
*தகை அறியேன்"* (திருவருட்பா 8, பதி. 85, பா. 7)

என்பதைக் காட்டலாம். திருவருட்பாவில் முதன்முதலாக இரண்டாம் திருமுறையிலேயே இச்சொல் கையாளப்பட்டுள்ளது. மேலும் தொடக்க நிலையில் சைவ சமயப் பழக்கங்களைப் பின்பற்றலே நன்னெறி (திருவருட்பா 8, பதி. 7, பா. 2) என்றும் திருவருட்பாவின் வழி அறிய முடிகின்றது. இவ்வாறு தொடக்க நிலையில் இச்சொல் இத்தகைய பொருளில் கையாளப்பட்டாலும், இராமலிங்கரின் பிற்காலப் படைப்புகளில் சமயம் கடந்த சன்மார்க்க நெறியினையே குறிப்பிடுவதை இவர் படைப்புகள் காட்டுகின்றன.

## இராமலிங்கருக்கு முன் 'சன்மார்க்கம்'

'சன்மார்க்கம்' என்னும் சொல்லைத் திருமூலரே (திருமந்திரம், 1477–8) முதன் முதலில் இலக்கிய உலகில் கையாண்டுள்ளார். இவரைத் தொடர்ந்து அருணந்தி சிவாச்சாரியார் (சிவஞான சித்தியார், சுபக்கம், 18 – 22), அருணகிரி நாதர் (திருப்புகழ், 5ஆம் படை வீடு, 316), தாயுமானவர் (திருப்பாடல், 12) போன்ற சைவ சமயத்தைச் சார்ந்தோராலும் இச்சொல் பயன்படுத்தப் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

இவர்களால் இச்சொல் சைவசமயப் பொருளிலேயே ஆளப் பெற்றுள்ளது. இராமலிங்க அடிகளார் இதற்கும் மேலான பொருள்களை இச்சொல்லிற்கு விரிவாகக் தருகின்றார் என்பது முன்னரே விளக்கப்பட்டது.

## சமரச சுத்த சன்மார்க்க நெறியினர் பின்பற்ற வேண்டிய நெறிமுறைகள்

வள்ளலார் சுத்த சன்மார்க்க நெறியினைப் பின்பற்றி அதன் பயனை அடைய விழைவார்க்குச் சில வழிமுறைகளை வகுத்துக் கொடுத்துள்ளார். அவை தெளிவு கருதி இங்கே கீழ்வரும் இரு பிரிவுகளில் ஆராயப் பெறுகின்றன.

**அ. தனி மனிதன் தன்னளவிற் கடைப்பிடிக்க வேண்டியவை.**

**ஆ. தனி மனிதன் சமுதாய அளவில் கடைப்பிடிக்க வேண்டியவை.**

இவை இரண்டும் ஒன்றுடன் ஒன்று தொடர்புடையன. முதற்பிரிவு தனிமனிதன் பெரும்பாலும் சமுதாய அளவின்றி தன்னளவில் மட்டுமே கடைப்பிடிக்க வேண்டியவற்றைத் தெளிவுறுத்தும். இரண்டாம் பிரிவில் தனி மனிதன் சமுதாயத்தோடு மட்டுமே ஆற்றக்கூடிய நெறிமுறைகள் ஆராயப் பெறுகின்றன. இவற்றைக் கையாளுவோரைச் சாதகர், சாத்தியர் எனும் இரு பிரிவுகளில் வள்ளலார் அடக்குவர். உரைநடையில் ஒரு சில பகுதிகள் இதனை

விளக்குவனவாய் உள்ளன.

**அ. தனி மனிதன் தன்னளவிற் கடைப்பிடிக்க வேண்டிய நெறிமுறைகள்**

1. சமய மதங்களில் நம்பிக்கை கொண்டு அவற்றைக் கண்மூடித்தனமாகப் பின்பற்றாமை.
2. "இறைவன் ஒருவன்" என்பதை ஏற்று அவ்விறைவனை ஒளிவடிவில் வழிபடல்.
3. இராமலிங்கர் குறிப்பிட்ட ஒழுக்கங்களைக் கடைப்பிடித்தல்.
4. மனைவியை இழந்தோர் மறுமணம் செய்து கொள்ளாமை.
5. அணிகலன்களை அணிந்து கொள்ளாமை.
6. கணவனை இழந்தோர் மங்கல அணியை அணிந்தே இருத்தல்.

**1. சமய மதங்களில் நம்பிக்கை கொண்டு அவற்றைக் கண்மூடித்தனமாகப் பின்பற்றாமை**

சமயம், மதம் ஆகிய இரு சொற்களும் ஒரே பொருளில் கையாளப்பட்டு வருகின்றன. இவைகட்கு இராமலிங்கர் சிறப்பாக விளக்கம் அளிக்கின்றார். இவர் சமயம் என்பது இஸ்லாம், கிருத்துவம், சைவம், வைணவம் ஆகியவற்றைக் குறிக்கும். மதம் என்பது வேதாந்தம், சித்தாந்தம் முதலியவற்றைக் குறிக்கும் என்றும் கூறுவர். இச்சமய மதங்களில் கூறப்படும் வேத ஆகமங்கள், புராணங்கள், இதிகாசங்கள், சாத்திரங்கள், ஆசாரங்கள் ஆகியவற்றின் உட்பொருளை உணராது பின்பற்றல் அவசியமில்லை என்று குறிப்பிடுகின்றார். சித்தர் பாடல்களிலும் இக்கருத்து நிலவுகின்றது (உலோகாதய சித்தர், 18).

இதனை இராமலிங்கர் பின்வருமாறு சாடுகின்றார்.

"வேத ஆகமங்கள் என்று வீண்வாதம் ஆடுகின்றீர்
வேத ஆகமத்தின் விளைவறியீர் - சூதாகச்
சொன்னஅலால் உண்மைவெளி தோன்ற உரைக்கவில்லை
என்ன பயனோ இவை. (திருவருட்பா 12, பதி. 29, பா. 30)

எனவே, வேதாகமக் கருத்துகளை உள்ளதை உள்ளபடி உணர்ந்து பின்னரே கடைப்பிடிக்க வேண்டும். வேதாகமங்களைத் தனக்கு இறைவனே உள்ளபடி உணர்த்தியதை,

வேதநெறி ஆகமத்தின் நெறி பவுராணங்கள்
விளம்புநெறி இதிகாசம் விதித்த நெறி முழுதும்
ஓதுகின்ற சூதனைத்தும் உளவனைத்தும் காட்டி
உள்ளதனை உள்ளபடி உணர்த்தினையே (திருவருட்பா 11, பதி. 7, பா. 8)

எனும் பாடல் அடிகளில் விளக்குவர். மற்றோரிடத்தில்,

தோன்றிய வேதாகமத்தைச் சாலம்என உரைத்தேம்
சொற்பொருளும் இலக்கியமும் பொய்எனக் கண்டறியேல்

ஊன்றியவே தாகமத்தின் உண்மை நினக்காகும்
உலகறி வேதாகமத்தைப் பொய்எனக் கண்டுணர்வாய்
**(திருவருட்பா 11, பதி. 36, பா. 88)**

இவ்வாறு வேத ஆகம உண்மைகளைத் தெளிவாக்கி, அவை குறித்து கருத்து தெரிவிக்கும் இவர், பிறிதோரிடத்தில் புகழ்ந்தும் கூறுவர்.

**வேதமேல் ஆணை,**
**ஒரம் சொல்கிலேன் நடுநின்று சொல்கின்றேன் (திருவருட்பா 12, பதி. 31, பா. 4)**

**வேதாகமங்கள் சாற்றுதல் சத்தியமே (திருவருட்பா 12, பதி. 40, பா. 8)**

எனக் கூறும் இவர், இதிகாசக் கதைகள் சிலவற்றிற்கு அதன் உண்மையான பொருளை உரைநடைப் பகுதியில் விளக்கிக் காட்டும் போக்கினைக் காண முடிகின்றது. எனவே, வேத ஆகம உட்பொருளை உணர்ந்து செயல்பட்ட தன்னைப் பின்பற்ற வேண்டும் என இவர் எதிர்பார்த்துள்ளார். தாம் உணர்ந்த உண்மைகளை உலகோரும் அறிய வேண்டும் என்பதற்கு இவர் மேற்கொண்ட முயற்சியினைப் பாடல்கள் காட்டுகின்றன.

மேற்கூறியவாறே சாத்திரங்கள், ஆசாரங்கள் போன்றவற்றின் உட்பொருளை உணர்ந்து செயல்பட வேண்டும் என மக்களைத் தூண்டியிருக்கின்றார்.

**2. இறைவன் ஒருவன் என்பதை ஏற்று, அவ்விறைவனை ஒளிவடிவில் வழிபடல்**

இறைவன் ஒருவன் என்னும் கருத்து தொன்று தொட்டுத் தமிழகத்தில் நிலவி வரும் கருத்தாகும். திருமூலர் திருமந்திரத்தில் 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' (திருமந்திரம், 2104) எனக் குறிப்பிடுவதைக் காட்டலாம். வள்ளலாருக்கு முன் இக்கருத்து தமிழகத்தில் வலுப்பெற்றிருந்த ஒன்றாகும் (திருவாசகம், திருவண்டப் பகுதி, வரி 43).

இராமலிங்கர் 'ஓரே தெய்வம்' என்ற கருத்தில் ஒளி வழிபாட்டை வற்புறுத்தியுள்ளார். இதனால் சிறு தெய்வ வழிபாடு, பல தெய்வ வழிபாடு, உருவ வழிபாடு ஆகியன மறுக்கப்பட்டன. இவை குறித்துத் தம்முடைய பாடலகளிலும், உரைநடைகளிலும் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார்.

## சிறு தெய்வ வழிபாடு மறுப்பு

நாட்டுப்புற மக்களிடையே நிலவும் சிறு தெய்வ வழிபாட்டு முறைகளை வள்ளலார் ஏற்றுக் கொள்ளவில்லை. சிறு தெய்வ வழிபாட்டில் முக்கியமாக உயிர்ப்பலி இடும் நிலை காணப்பட்டதால் இதனை வெறுத்துள்ளார். தொடக்க நிலையில் தெய்வத்தை அமைதிப்படுத்தும் நோக்கில் எழுந்த இந்நிலை இன்றும் நீடித்திருப்பது வருந்தத்தக்கது. திருவருட்பாவில்,

"நலிதரு சிறிய தெய்வமென் றையோ
நாட்டிலே பலபெயர் நாட்டிப்

பலிதர ஆடு, பன்றிக் குடங்கள்
பலிக்கடா முதலிய உயிரைப்
பொலிவுறக் கொண்டே போகவும் கண்டே
புந்தி நொந்து உள நடுக்குற்றேன்
கலியுறு சிறிய தெய்வவெங் கோயில்
கண்ட காலத் தினும் பயந்தேன்''
(திருவருட்பா 10, பதி. 13, பா. 63)

என இராமலிங்கர் பாடியுள்ளதால் சிறிய தெய்வ வழிபாட்டினை இவர் மறுக்கும் நோக்கம் வெளிப்படுகின்றது. மேற் கூறியவாறு பல தெய்வ வழிபாட்டினையும் இவர் ஏற்றுக் கொள்ளாததை,

'தெய்வங்கள் பலபல சிந்தை செய்வாரும்' (திருவருட்பா 12, பதி. 12, பா. 11)

எனும் பாடல் வழி அறியலாம்.

## இறை ஒருமைக் கோட்பாடு

மேற்காணும் குறிப்புகளிலிருந்து இவர் சிறுதெய்வ, பலதெய்வ வழிபாடுகளை மறுத்து இறை ஒருமைக் கொள்கையை மக்களிடையே வைத்தார் என்பது உணரப்படுகின்றது. மேலும், இறைவன் ஒளி வடிவானவன் என்றும் அவனை அகத்தே கண்டு களிக்கலாம் என்றும் கூறுகின்றார். வள்ளற்பெருமானார் தாம் சித்தி அடைவதற்கு ஒரு மாதத்திற்கு முன் 1873ஆம் ஆண்டில் இக்கருத்தை தம்மைச் சார்ந்தோருக்குத் தெளிவாகப் புகட்டினார். பின்வரும் பகுதி இதனை உறுதி செய்யும்.

''இதைத் தடைபடாது ஆராதியுங்கள். இந்தக் கதவைச் சாத்திவிடப் போகிறேன். இனி கொஞ்ச காலம் எல்லோரும் ஆண்டவர் இப்போது தீப முன்னிலையில் விளங்குகின்றபடியால் உங்களுடைய காலத்தை வீணிற் கழிக்காமல் நினைந்து நினைந்து என்னும் தொடக்கமுடைய பாசுரமடங்கிய பாடலிற் கண்டபடி தெய்வ பாவனையை இந்தத் தீபத்திற் செய்யுங்கள்''
(திருவருட்பா உரை நடைப் பகுதி, ப. 438).

இவ்வாறே திருவருட்பாவில் பல இடங்களில் இக்கருத்து வலுப்பெறுகின்றது. அதிலும் 'அருட்பெருஞ்சோதி அகவல்' (திருவருட்பா 12, பதி. 1) எனும் நீண்ட அகவற்பா 798 கண்ணிகளில் ஒளி வடிவ இறைவனை மையமாகக் கொண்டு எழுதப் பெற்றது. இது மட்டுமன்றி, 'திருச் சிற்றம்பலத் தெய்வமணிமாலை' (திருவருட்பா 10, பதி. 2), 'நடராஜபதி மாலை' (திருவருட்பா 11, பதி. 1) ஆகியனவும் இக்கருத்தை உறுதி செய்கின்றன. இவையன்றி, உரைநடையில் 'சமரச சுத்த சன்மார்க்க சத்திய ஞான விண்ணப்பம்' (திருவருட்பா உரைநடைப் பகுதி, ப. 453 – 57) முழுமையாக ஒளி வடிவ இறைவனைப் போற்றலையே நோக்கமாக் கொண்டு இயற்றப் பெற்றது. மேற்கூறியன மட்டுமல்லாமல், மேலும் பல இடங்களில் இக்கருத்து மேலோங்கி நிற்கின்றது. எடுத்துக்காட்டாக,

"உருவராகியும் அருவினராகியும் உரு அருவினராயும்
ஒருவரே உளர் கடவுள்கண் டறிமினோ உலகினீர்
இருவராம் என்றும் மூவரேயாம் என்றும் உணர்வின்றி இயலும்
ஐவர்கள் என்றும்
எழுவராய் உரைத் துழல்வதென் உடற்குயிர் இரண்டு மூன்றெனலாமே"
(திருவருட்பா 10, பா. 45)

என்ற பாடலில் கடவுள் ஒருவரே எனும் கொள்கையை அறுதியிடுகின்றார்.

## ஒளி வழிபாடு தத்துவ விளக்கம்

இராமலிங்கர் ஒளி வழிபாட்டின் மந்திரச் சொல்லாக,

"அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி
தனிப் பெருங்கருணை அருட்பெருஞ்சோதி"

என்பதைக் கையாண்டார். நம்முன் சாதனம் கருணையாதலாலே ஆண்டவர் இம்மந்திரத்தை எடுத்துக் கொண்டார் என்கிறார் (திருவருட்பா உரை நடைப் பகுதி, ப. 359). இவற்றுடன்,

"அருளே நம்மியல் அருளே நம்உரு
அருளே நம்வடிவாம் என்ற சிவமே" (திருவருட்பா 12, பதி. 1, கண்ணி 500)

என்பதால் இறைவனே கருணை வடிவானவன் என்கிறார். இக்கருத்தையே ஜீவகாருணிய ஒழுக்கத்திலும் (திருவருட்பா உரைநடைப் பகுதி, ப. 71) வற்புறுத்துகின்றார்.

இவ்வொளி வழிபாடு பற்றிக் கூறும்போது நம்முடைய ஆன்மா சிறிய அணுவை ஒத்த வடிவானது. ஆயினும் கோடி சூரியர்களின் பிரகாசத்தை உடையது. இதன் இருப்பிடமாகப் புருவ மத்தியினைக் குறிப்பிடலாம். இந்த ஆன்மப் பிரகாசத்தினை மறைக்கும் சக்திகளாக ஏழு திரைகள் காணப்படுகின்றன. அவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு நிறத்தைப் பெற்றனவாக உள்ளன. இத்திரைகளை நாம் அறிந்து ஒவ்வொன்றாக நீக்கினால் இறைவனைக் காணலாம் என்பது இவர் விளக்கமாகும். அருட்பெருஞ்சோதி அகவல் மற்றும் உரைநடைப் பகுதியிலும் இவை குறித்துத் தெளிவாக விளக்கப்பட்டுள்ளன. வள்ளலாருக்கு முன் மணிமேகலையில் ஆசீவகர்களின் பிறப்பைப் பற்றிக் குறிப்பிடும் போது, ஏழு நிறங்கள் அங்கேயும் காணப்படுதலை இவண் ஒப்பு நோக்கலாம் (மணிமேகலை 27, பக். 150 – 55). இவற்றோடு, இறைவனைப் பல பெயர்களாலும் அழைத்துச் சமயப் பொதுமையை நிலை நாட்டுவர். இதனை,

பெருகியபேர் அருளுடையார் அம்பலத்தே நடிக்கும்
பெருந்தகைஎன் கணவர்திருப் பேர்புகல்என் கின்றார்
அருகர்புத்தர் ஆதிஎன்பேன் அயனென்பேன் நாரா
யணன்என்பேன் அரன்என்பேன் ஆதிசிவன் என்பேன்

பருகுசதா சிவம்என்பேன் சத்திசிவம் என்பேன்
பரமம் என்பேன் பிரமம் என்பேன் பரப்பிரமம் என்பேன்
துருவுசுத்தம் பிரமம்என்பேன் துரியநிறை வென்பேன்
சுத்தசிவம் என்பேன்இவை சித்து விளையாட்டே.
(திருவருட்பா 12, பதி. 42, பா. 87)

எனும் பாடலில் விளக்குகின்றார்.

### 3. இராமலிங்க அடிகளார் குறிப்பிட்ட ஒழுக்கங்களைக் கடைப்பிடித்தல்

சமரச சுத்த சன்மார்க்க நெறியினைக் கடைப்பிடிப்போருக்குத் தனிமனித ஒழுக்கம் அவசியமாகின்றது. அனைத்துச் சமய மதங்களும் இக்கருத்தை வலியுறுத்துகின்றன. இருப்பினும் இவர் இதனை விளக்குவதில் தனித்த இடத்தைப் பெற்றுள்ளார். புத்தர் தம்முடைய கொள்கைகளில் அடிப்படைத் தத்துவமாகத் துக்கம், துக்க காரணம், துக்க நிவர்த்தி ஆகியவற்றைக் கூறுவர். இதனுள் துக்க நிவர்த்தி நோக்கிச் செல்லும் மார்க்கத்தில் அஷ்டாங்க மார்க்கம் என்ற எட்டு ஒழுக்கங்களைக் குறிப்பிட்டுள்ளார். அவை நற்காட்சி, நல்லொழுக்கம், நல்வாய்மை, நல்வாழ்க்கை, நற்செய்கை, நன்முயற்சி, நற்கடைப்பிடி, நல்லுணர்ந்தோர் தலைப்பாடு ஆகியவற்றில் நல்லொழுக்கத்திலேயே அனைத்தும் அடங்கியுள்ளன. இவ்வாறே சமண சமயமும் இரத்தினத் திரவியங்களாகக் குறிப்பிடும் நான்கனுள் நல்ஞானம், நற்காட்சி, நல்லொழுக்கம் என்ற மூன்றனுள் நல்லொழுக்கமும் சுட்டப்பெறுகின்றது.

இவ்வாறே இலக்கியங்களிலும் ஒழுக்கத்திற்கு முக்கியத்துவம் அளிக்கப் பெறுகின்றது. வள்ளலார் இவைகளைக் கருத்தில் கொண்டே தம்முடைய சுத்த சன்மார்க்க நெறியில் நான்கு வகையான ஒழுக்கங்களை (திருவருட்பா உரைநடைப் பகுதி, பக். 308 – 11, 348–49) அறிமுகப்படுத்துகின்றார். இந்திரிய ஒழுக்கம், கரண ஒழுக்கம், ஜீவ ஒழுக்கம், ஆன்ம ஒழுக்கம் எனும் பெயரில் அமைந்துள்ள இவை ஆன்மீக உலகிற்கும், இலக்கிய உலகிற்கும் புதியனவாக உள்ளன. வள்ளலாரின் வாய்மொழி அறிவுரைகளில் இவை பற்றிக் கூறியுள்ளார். திருவருட்பா பாடல்களிலும் பல இடங்களில் ஒழுக்க விதிகள் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன (திருவருட்பா 1).

### 4. மனைவியை இழந்தோர் மறுமணம் செய்து கொள்ளாமை

இக்கருத்து இராமலிங்கரின் படைப்புகளில் ஒரே இடத்தில் மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது (திருவருட்பா உரைநடைப் பகுதி, ப. 430). மகப்பேறு கருதியும், மனைவி இறந்த காரணத்தாலும், பிற காரணங்களாலும் ஆண்கள் மறுமணம் செய்து கொள்கின்றனர். வள்ளலார் மனைவியை இழந்த பின்னால் கூட ஒருவன் மறுமணம் செய்தல் கூடாது என்கிறார். கணவனை இழந்த மனைவி எவ்வாறு தனித்து வாழ்கிறாளோ அவ்வாறே ஆண்மகனும் வாழ வேண்டும் என இவர் சுத்த சன்மார்க்க நெறியில் வாழ்வோருக்கு அறிவுறுத்துகின்றார்.

### 5. அணிகலன்களை அணிந்து கொள்ளாமை

தொன்று தொட்டுப் பயின்று வரும் இப்பழக்கத்தினைச் சுத்த சன்மார்க்க நெறியில் நாட்டமுடையோர் பின்பற்ற வேண்டாம் என்பது இராமலிங்கர் கருத்தாகின்றது. இறை நாட்டத்திற்கு மேற்காணும் மூவாசைகளில் ஒன்றான பொன்னாசை தடையாய் இருக்கும் என இவர் எண்ணியிருக்கலாம்.

### 6. கணவனை இழந்தோர் மங்கல அணியைக் கழற்றாமல் அணிந்தே இருத்தல்

இந்திய நாட்டில் கணவனை இழந்த பெண்கள் கைமை நோன்பியற்றி வாழ்ந்ததை வரலாறு காட்டுகின்றது. இதனை விட இறந்தவுடன் உடன் மாய்தல், தீப்புகல் ஆகிய செயற்பாடுகளைச் செய்து தம்மை அழித்துக் கொண்டனர். காலப்போக்கில் இராசாராம் மோகன்ராய் போன்ற சீர்திருத்தவாதிகளின் முயற்சியால் இப்பழக்கம் நீக்கப்பட்டது. இதன் பயனாக 16ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த (ஆந்திராவில்) வீரபிரம்மங்கார் எனும் ஞானி தான் ஜீவசமாதி அடையும் முன் மனைவியை அழைத்துத் தான் மறைந்தாலும் தன் துணைவி மங்கலக் கோலத்துடனேயே வாழ வேண்டும் என்றும், அவரை யாரேனும் தூற்றினால் துன்பம் அடைவர் எனவும் கூறியதை அறியலாம். இராமலிங்கரும் தம் நெறியைப் பின்பற்றும் பெண்கள் கணவன் இறந்து பட்டாலும், மங்கல அணியைக் கழற்றாமல் அணிந்தே இருக்க வேண்டும் எனக் கட்டளையிட்டார் (மேற்படி, ப. 430). கணவனை இழந்த துன்பத்தினை விட, அதன் பின் அப்பெண்ணிற்குச் செய்யும் கொடுமையான சடங்குகள், அவளைத் துன்புறுத்தி மங்கல அணியைக் கழற்றச் செய்தல் போன்றவற்றை இவர் விரும்பவில்லை. தம் விதவைத் தாயின் கோலம் கூட இவருக்கு இத்தகைய எண்ணத்தைத் தோற்றுவித்திருக்கலாம். இராமலிங்கரின் உரைநடையில் இப்பகுதி காணப்படுகின்றது. சமுதாயத்தில் பல விழிப்புணர்வுகளை ஏற்படுத்திய வள்ளலார் தனி மனித ஒழுக்கத்தின் காரணமாக இக்கருத்தைக் கூறியிருக்கலாம். இக்கருத்தினைப் பற்றி இவர் விரிவாக ஏதும் கூறவில்லை என்பது இவண் சுட்டத்தக்கது.

## ஆ. தனி மனிதன் சமுதாய அளவில் கடைப்பிடிக்க வேண்டிய நெறிமுறைகள்

தனி மனிதன் தான் உணர்ந்து பின்பற்ற எண்ணினாலும் சமுதாயத்தின் துணைக் கொண்டே அதனை நிறைவேற்ற இயலும். அத்தகைய பண்புகளைக் கொண்ட சுத்த சன்மார்க்க நெறிமுறைகள் யாவன :

1. உயிர் இரக்க உணர்வு கொண்டு இலங்கல்
2. ஒருமைப்பாட்டு உணர்வினைக் கைக்கொள்ளல்
3. இறந்தாரை அடக்கம் செய்தல்
4. பெண்களை ஆண்களுக்குச் சமமாக எண்ணல்

### 1. உயிர் இரக்க உணர்வு கொண்டு இலங்கல்

வள்ளலார் இறைவனை அருளோடு சேர்த்தே எண்ணினார் என்பது முன்னரே விளக்கப்பட்டது. உயிர்த் துன்பம் போக்கல் பற்றிய சிந்தனைகள் ஏற்கெனவே பலரால்

சுட்டப்பெற்ற கருத்தாயினும், இதற்கென இலக்கணம் வகுத்து, உயிர் துன்பங்களைப் பாகுபாடு செய்து, மக்களிடையே இரக்கத்தோடு வாழ்தலைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தியவர் வள்ளலார் ஒருவரே ஆவர். சன்மார்க்கத்தினை விளக்கும் போது ஜீவகாருணியமே சன்மார்க்கம், அல்லாத வழி துன்மார்க்கம் (திருவருட்பா உரைநடைப் பகுதி, ப. 52) என்று விளக்கினார்.

மேலும்,

*தயை உடையார் எல்லாரும் சமரச சன்மார்க்கம் சார்ந்தவரே*
(**திருவருட்பா 11, பதி. 36, பா. 74**)
*அருளுடையார் எல்லாரும் சமரச சன்மார்க்கம் அடைந்தவரே*
(**திருவருட்பா 11, பதி. 36, பா. 75**)

என்றார். மேலும், ஜீவகாருணியத்திற்கு நேர்த் தமிழ்ச் சொல் 'உயிர் இரக்கம்' என்பதைத் தமிழுலகிற்கு அறிமுகம் செய்தவர் வள்ளலாரே. உயிர்த் துன்பத்தை ஏழு வகையாகப் பிரித்து (பசி, பிணி, பகை, கொலை, இச்சை, எளிமை, பயம்) அதனைப் பர ஜீவகருணியம், அபர ஜீவகாருணியம் என இரண்டாகப் பாகுபாடும் செய்தார். அதிலும் பசித்துன்பம் பற்றி இவர் மிகவும் விளக்கமாக "ஜீவகாருணிய ஒழுக்கம்" எனும் நூலில் தந்துள்ளார். இந்நூலில் இவர்தம் விளக்கத்தை வேறு எங்கும் காண இயலாது. இவ்வாறே உயிர்ப்பலி இடல், புலால் உண்ணல் ஆகியவற்றைத் தம்நெறியைக் கையாளுவோர் கட்டாயமாக நீக்க வேண்டும் என்றார். அருட்பெருஞ்சோதி அகவலில் (கண்ணி 969) இக்கருத்தை மிகவும் ஆழமாகக் கூறியுள்ளார். எவ்வளவு கொடியவர் ஆனாலும் அவருக்கும் பசி நீக்க வேண்டும் (திருவருட்பா 11, பதி. 36, பா. 73) என்பது இவர்தம் கருத்தாகின்றது.

## 2. ஒருமைப்பாட்டு உயர்வினைக் கைக்கொள்ளல்

சமரச சுத்த சன்மார்க்க நெறியின் பயன்களை அடைவோர் ஒருமைப்பாட்டினைக் கைக்கொள்ள வேண்டியராகின்றனர். வள்ளலாருக்கு முன் 'யாதும் ஊரே யாவரும் கேளிர்" (திருமந்திரம் 2104) எனும் கருத்துக் கூறப்பட்டாலும், இவர் அதற்கும் மேலாக இக்கருத்தை நிலை நாட்டுகின்றார். அனைத்து உயிர்களையும் தம்முயிரைப் போல் எண்ணல் அவசியம் என்கிறார். 'எவ்வுயிரும்' பொது (திருவருட்பா 12, தனித்திருமாலை, பா. 7) 'எத்துணையும் பேதமுறாது' (திருவருட்பா 12, தனித்திருமாலை பா. 8) எனும் பாடல்கள் இதனை உறுதி செய்யும். மேலும் 'ஆன்மநேய ஒருமைப்பாடு' எனும் தொடரால் ஒருமைப்பாட்டினை இவர் குறித்தார். தமிழ் நாட்டில் இதற்குமுன் இத்தொடரை ஒருவரும் கையாளவில்லை என்பதே உண்மையாகும். ஒருமைப்பாட்டிற்கு முக்கியத் தடையாய் இருக்கும் சாதியை ஒழிக்க இவர் பாடுபட்டார். அதனை இறை உணர்வோடு இணைத்தே பேசினார். சான்றாக,

*" சாதியும் மதமும் சமயமும் பொய்யென*
*ஆதியில் உணர்த்திய அருட்பெருஞ்சோதி"*
(**திருவருட்பா 12, அருட்பெருஞ்சோதி அகவல், கண்ணி 211**)

என்பதைக் காட்டலாம். திருவருட்பாவில் ஆறாம் திருமுறையில் இக்கருத்து

வலுப்பெறுகின்றது. இராமலிங்கருக்கு முன் வைகுண்டர் சாதியை ஒழிக்க மிகவும் பாடுபட்டார் என்பது இவண் குறிப்பிடத்தக்கது.

### 3. 'இறந்தாரை அடக்கம் செய்தல்'

இராமலிங்கர் தம்முடைய சமரச சன்மார்க்க நெறியைப் பின்பற்றுவோருக்கு விடுத்த அறிக்கை ஒன்றிலும் (*திருவருட்பா உரை நடைப் பகுதி, ப.* **430**), திருவருட்பாப் பதிகம் (*திருவருட்பா* **12**, *பதி.* **35**, *பா.* **5-10**) ஒன்றிலும் இக்கருத்தை அறுதியிடுகின்றார். கன்னிப் பெண்கள், அம்மை நோய் கண்டு இறந்தவர்கள், துறவிகள், குழந்தைகளை அடக்கம் செய்யும் பழக்கம் தொன்று தொட்டு இருந்து வந்துள்ளது. இறந்தவரைப் புதைத்தலுக்கு உரிய காரணத்தை வள்ளலார் தெளிவாகக் குறிப்பிடவில்லை. **'இறந்தாரை எரித்தால் அது கொலை'** (*திருவருட்பா* **12**, *பதி.* **36**, *பா.* **7**) என்றும், **'கழுகுண்டாலும் பயன் உண்டு'** (*திருவருட்பா* **12**, *பதி.* **35**, *பா.* **6**) என்றும் அவர் தம் பாடல்களில் பாடியுள்ளார். வள்ளலாரைக் குறித்து ஆய்வு செய்த துறவி கந்தசாமியும், ஊரன் அடிகளும் பின்வரும் கருத்தைக் கூறுகின்றனர். இறந்த உடலில் 96 தத்துவங்களில் 95 தத்துவங்கள் உயிர் உடம்பை விட்டுச் சென்றவுடன் 'தனஞ்செயன்' எனும் ஒரு வாயு மட்டும் உயிர் பிரிந்த மூன்று நாட்களின் பின்தான் வெளியேறும். அதனால் இறந்த உடலை எரியூட்டக் கூடாது என்று விளக்கம் தருகின்றனர். இக்கருத்து மேலும் ஆய்வுக்கு உரியது.

### 4. பெண்களை ஆண்களுக்குச் சமமாக எண்ணல்

சுத்த சன்மார்க்க நெறியில் நிற்பவர்கள் ஆண் பெண் வேறுபாடு காட்டாமல் வாழ வேண்டும் என்பது வள்ளலார் கருத்தாகும். பெண்ணுக்கு ஆன்மீகக் கல்வியைத் தர வேண்டும் (*திருவருட்பா உரை நடைப் பகுதி, ப.* **322**) என்பதும், ஆன்மாவிற்கு ஆண் பெண் பேதமில்லை (*திருவருட்பா* **12**, *பதி.* **1**, *கண்ணி* **352**) என்பதும் இவர்தம் முடிபு ஆகின்றன.

#### சுத்த சன்மார்க்க நெறியின் நோக்கமும் பயனும்

சுத்த சன்மார்க்க நெறியின் முடிந்த முடிபாகவும் இறுதிப் பேறாகவும் முக்கியக் குறிக்கோள் அல்லது நோக்கமாகவும் வள்ளற்பெருமான் அறுதியிட்டுக் கூறுவது மரணம் இல்லாது வாழ்தல் ஆகும். பின்வரும் பகுதியில் இக்கருத்தை உறுதி செய்கின்றார்.

> " சன்மார்க்கத்தின் முடிபு சாகாக்கல்வியைத்
> தெரிவிப்பதே அன்றி வேறில்லை.
> சாகின்றவன் சன்மார்க்க நிலையைப்
> பெற்றவன் அல்லன், சாகாதவனே சன்மார்க்கி"
>
> (*திருவருட்பா உரை நடைப் பகுதி, ப.* **307**)

மேலும் **"ஆண்டவர் சோதிக்கின்றார் என்பது பிணி, மூப்பு, பயம், பசி முதலியவற்றால் வருந்தச் செய்விப்பதல்ல. மரணமடையச் செய்விப்பதே"** (மேற்படி, ப. **297**) என்றும்

குறிப்பிடுகின்றார். இவற்றுடன் மனிதனுக்கு மரணம் ஏற்படுவது அவன் உண்ணும் உணவும் பழக்கம், ஒழுக்கக் கட்டுபாடின்மை போன்றவற்றால் ஏற்படுகிறது என்கிறார் (**மேற்படி, ப. 205**).

**மரணமிலாப் பெருவாழ்வு**

இறப்பு, பிறப்பு பற்றித் திருவள்ளுவப் பெருந்தகை கூறுகையில்,

> "*உறங்குவது போலும் சாக்காடு உறங்கி*
> *விழிப்பது போலும் பிறப்பு*" (339)

எனக் கூறியுள்ளார். இத்துடன் '*குடம்பை தனித்தொழிய*' (**மேற்படி, ப. 338**) எனும் பாடலிலும் உடம்புக்கும் உயிருக்கும் உள்ள தொடர்பை விளக்குகின்றார். வள்ளலாரும் உடம்பு உயிரைவிட்டுச் செல்லுதலையே 'மரணம்' எனக் கொண்டார். இதற்கு,

> "*கூற்றுவரும் கால்அதனுக் கெதுபுரிவீர் ஐயோ*"
> (**திருவருட்பா 12, பதி. 33, பா. 3**)
>
> "*சினமுடைய கூற்றுவரும் செய்தி அறியிரோ* "
> (**மேற்படி, பதி. 33, பா. 8**)

என்னும் திருவருட்பா பாடல் அடிகளைச் சான்றாக்கலாம். மேலும், இவர் மரணம் தவிர்த்தலை, 'மரணமிலாப் பெருவாழ்வு' எனும் தொடரால் விளக்குவார். இங்குப் 'பெருவாழ்வு' எனும் சொல்லிற்குப் பொருள் காண முயலும் போது, 'இறைநிலை பெற்று வாழ்தல்' என்னும் பொருளைக் கொள்ளலாம். இதற்கு அழிவுறா அருள்வடிவப் பேறு (**மேற்படி, பதி 16, பா. 1-10**) எனும் பதிகம் சிறந்த எடுகோளாகும். அப்பதிகத்தில்,

> "*சிற்றம்பலத்துள் நடம் செய்கின்ற பெருவாழ்வே*" (**திருவருட்பா 11, பதி. 16, பா. 1**)

என வரும் பாடலடிகளைக் கொண்டு மேற்காணும் செய்தியை உறுதி செய்யலாம்.

இராமலிங்க அடிகளாரின் கொள்கையின் படி மரணமிலாப் பெருவாழ்வு என்பதற்கு மேலும் சில விளக்கங்களை அளிக்காம். நாம் பெறும் இறுதிப் பேறு நான்கென இவர்தம் அறிவுரையில் (**திருவருட்பா உரைநடைப் பகுதி, ப. 308**) கூறுகின்றார். அதில் இறுதியாக வருவது, '*கடவுள்நிலை அறிந்து அம்மயமாதல்*' (**மேற்படி, ப. 308**) என்பதாம். வள்ளலார் கடவுள் நிலையை ஒளி எனக் கொள்வதால் இங்கு அம்மயமாதல் என்பதற்குச் 'சோதி மயமாதல்' எனும் பொருளைக் கொள்ளலாம். இவ்வுடலை ஒளி வடிவாக மாற்றிக் கொள்ளலாம் என்பது இவர்தம் முடிந்த முடிபாகும். இதனை,

> "*ஊன் செய்த தேகம் ஒளிவடிவாக நின்றோங்குகின்றேன்*"
> (**திருவருட்பா 12, பதி. 8, பா. 3**)

எனும் பாடலடிகள் எடுத்துக்காட்டும்.

### மரணமிலாப் பெருவாழ்வு பெற்ற உடம்பின் நிலை

இவ்வுடலை எதனாலும் அழிக்க முடியாது. இதற்கு,

காற்றாலே புவியாலே ககனமத னாலே
கனலாலே புனலாலே கதிராதி யாலே
கூற்றாலே பிணியாலே கொலைக்கருவி யாலே
கோளாலே பிறஇயற்றும் கொடுஞ்செயல்க ளாலே
வேற்றாலே எஞ்ஞான்றும் அழியாதே விளங்கும்
மெய்அளிக்க வேண்டும் என்றேன்.
(திருவருட்பா 12, 44 தனித்திருமாலை, பா. 40)

எனும் பாடலைச் சான்றாகக் காட்டலாம். இதே கருத்தினையே ஜீவகாருணிய ஒழுக்கத்திலும் தெளிவாகக் கூறுகின்றார் (திருவருட்பா உரைநடைப் பகுதி, பா. 77). இராமலிங்கருக்கு முன் "*பகவத் கீதையிலும்*" (பா. 23-25) இக்கருத்து வலியுறுத்தப்படுகின்றது. வள்ளற்பெருமானார் இந்நிலையை ஒரு மனிதன் பெற வேண்டுமெனில் இறைவனின் திருவருளாலேதான் அடைய முடியும் என்கிறார் (*திருவருட்பா 11, தனித்திருத்தொடை, பா. 27*). இவர் குறிப்பிடும் மரணமிலாப் பெருவாழ்வினைப் பலவாறு தம் படைப்புகளில் குறிப்பிடுகின்றார். *அழியாத் திருவுருவம்* (திருவருட்பா 11, பதி. 19, பா. 5), *இறவாப் பெருநிலை* (திருவருட்பா 14, பதி. 7, பா. 23), *நித்திய வாழ்வு* (திருவருட்பா 12, பதி. 39, பா. 4) என்பனவாக இவை அமைகின்றன.

### சுத்த சன்மார்க்க நெறியோடு தொடர்புடைய பிற செய்திகள்

வள்ளற்பெருமான் சுத்த சன்மார்க்க நெறியினை விளக்குமிடங்களில் அதனோடு தொடர்புடைய பின்வரும் செய்திகளைக் கூறிச் செல்கின்றார். இவை நேரடியாக இந்நெறிக்குத் தொடர்பு இல்லையெனினும் ஆங்காங்கே இழையோடிச் செல்வனவாய் உள்ளன. அவை வருமாறு :

அ. அருட்பெருஞ்சோதி ஆண்டவர் வருகை

ஆ. இறந்தார் எழுதலும், எழுப்புதலும்

இ. சுத்த சன்மார்க்கம் விளங்கும் காலம்

இவை குறித்த முழுமையான விளக்கங்களை இவர்தம் படைப்புகள் தரவில்லை. இவை இவர்தம் படைப்புகளில் கையாடப்பட்டுள்ள முறைமை பற்றிச் **'சுத்த சன்மார்க்க நெறி'** எனும் நூலில் காணலாம் (1991 : 209)

### சுத்த சன்மார்க்க நெறியின் வளர்ச்சி நிலைகள்

இராமலிங்க அடிகளாரின் படைப்புகளில் இந்நெறி ஒரே இடத்தில் விளக்கப் படவில்லை. தொடக்கம் முதல் இறுதிக்காலம் வரை இவரது எண்ணங்களின் வளர்ச்சியில் படிப்படியாக இந்நெறியை வளர்த்துச் செல்லுகின்றார். மேலும் இவர்தம் திருவருட்பா மற்றும் உரைநடைகள் இரண்டும் இவர் வாழ்வின் தொடக்கநிலையில் சைவம் சார்ந்தவையாகவும்

பின்னர் அதனைக் கைவிட்டுச் சமரச சுத்த சன்மார்க்க நெறியைக் கையாளுவதுமாகிய இருவேறு நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டுள்ளன. இதனைக் கருத்தில் கொண்டு பின்வரும் இரு பிரிவுகளாக இவர்தம் எண்ண வளர்ச்சியினை ஆராயலாம்.

அ. சென்னை வாழ்வில் இயற்றப்பட்டவற்றில் வளர்ச்சி நிலைகள்.

ஆ. சென்னையை விட்டு நீங்கிய காலத்தில் வளர்ச்சி நிலைகள்.

**அ. சென்னை வாழ்வில் இயற்றப்பட்டவற்றில் வளர்ச்சி நிலைகள்**

இராமலிங்க அடிகள் சென்னையில் சைவ சமயத்தைப் பின்பற்றித் தல வழிபாடுகளை இயற்றிய காலத்தில் இயற்றியவை முதல் மூன்று திருமுறைகள் மற்றும் ஐந்தாம் திருமுறைப் பாடல்கள் ஆகியவை ஆகின்றன. இக்காலக்கட்டத்தில் உரைநடைகள் சிலவற்றையும் எழுதியுள்ளார். இவைகளில் இவர் தம் வாழ்நாளில் பின்னர் விளக்கிய சுத்த சன்மார்க்க நெறியின் நெறிமுறைகளில் சிலவற்றைத் தொட்டுக் காட்டியுள்ளார் (**மேற்படி, ப. 225-240**). அவை வருமாறு :

1. சிறு தெய்வ வழிபாடு மேற்கொள்ளாமை
2. ஒளி வழிபாடு
3. ஒழுக்கங்களைக் கடைப்பிடித்தல்
4. உயிர் இரக்க உணர்வு கொண்டு இலங்கல்
5. ஒருமைப்பாட்டு உணர்வினை மேற்கொள்ளல்

இவை அனைத்தும் பின்னர் வலுப்பெற்றுச் சுத்த சன்மார்க்க நெறியாக உருவாக்கம் பெற்றன.

**ஆ. சென்னையை விட்டு நீங்கிய காலத்தில் இயற்றப்பெற்ற படைப்புகளில் சுத்த சன்மார்க்க வளர்ச்சி நிலைகள்**

இக்காலக் கட்டத்தில் இவர் அதி தீவிரமாகச் சுத்த சன்மார்க்க நெறியை வளர்க்க முற்பட்டுள்ளார். இதனைப் பின்வரும் இரு நிலைகளில் நோக்கலாம்.

1. நான்காம் திருமுறையில் சுத்த சன்மார்க்க வளர்ச்சி
2. ஆறாம் திருமுறை உரைநடைகள் ஆகியவற்றில் சுத்த சன்மார்க்க வளர்ச்சி.

**நான்காம் திருமுறைப் பாடல்களில் சுத்த சன்மார்க்க வளர்ச்சி நிலைகள்**

தொடக்க நிலையில் முழுமையாகச் சைவ சமயத்தைப் பின்பற்றிய வள்ளற் பெருமானார் நான்காம் திருமுறைப் பாடல்களை இயற்றிய காலத்தில் சுத்த சன்மார்க்க வளர்ச்சியை நோக்கிச் செல்லும் நிலையைக் காணலாம். பாடல்களில் உருவ வருணனைகள், புராணமரபுச் செய்திகள், வெண்ணீற்றின் பெருமை ஆகியன இங்கே அதிகம் இடம் பெறவில்லை. எனவே, சுத்த சன்மார்க்க வளர்ச்சியில் இடைக்கால நிலையை இத்திருமுறையில் காணலாம். இத்திருமுறையில் சன்மார்க்கம் எனும் சொல்லைக்